# நீர் நித்தியத்தை எங்கே செலவிடப் பேர்கிறீர



அருமையான ஆத்துமாவே, நீர் இப்போது மரிப்பீரானால், நித்தியத்தைக் கழிப்பதற்காக பரலேகத்திற்கா அல்லது நரகத்திற்கா செல்வீர் என உமக்குத் தெரியுமா? நீர் இதனைத் தெரிந்து கொள்ளலாம் என வேதாகமம் தேவனின் வார்த்தை கூறுகிறது.

எனது நண்பரே, உமது முழு வாழ்வின் மிக முக்கியமான கேள்வியை நான் கேட்கிறேன். நீர் உமது நித்தியத்தை எங்கே செலவிடப்போகிறீர் என்பதை உமது பதில் தீர்மானிக்கும்! அந்தக் கேள்வி: நீர் இரட்சிக்கப்பட்டுள்ளீரா? என்பதாகும். இது நீர் ஒரு சபை அங்கத்தவரா என்பதல்ல ஆனால் நீர் இரட்சிக்கப்பட்டுள்ளீரா என்பதாகும். இது நீர் ஒரு நல்ல வாழ்க்கை வாழ்கிறீரா என்பதாயிராமல், நீர் இரட்சிக்கப்பட்டுள்ளீரா என்பதாகும். நீர் இதற்காகக் கிரியை செய்கிறீரா அல்லது இதை நம்பப் போகிறீரா என்பதாயிராமல் நீர் இரட்சிக்கப்பட்டுள்ளீரா? நீர் ஒரு கிறிஸ்தவன் என்று கூறிக்கொள்கிறீரா அல்லது இரட்சிக்கப்பட்டுள்ளீரா? .....நாம் இரட்சிக்கப்பட வேண்டும் என அப் 4:12ல் வேதாகமம் கூறுகிறது.

நீர் ஒரு பாவியென்பதை ஏற்றுக்கொள்ளும். 'நீதிமான் ஒருவனாகிலும் இல்லை' ரோமர் 3:10, 'நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும்' ரோமர் 3:12, 'எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களானார்கள்' ரோமர் 3:23.

நண்பரே, உமது பாவம் உம்மை தேவமகிமை அற்றவராக்கியுள்ளது, அது உம்மை பரலோகத்திற்குள் பிரவேசிப்பதற்கு தகுதியற்றவராக்கியுள்ளது.

ஒருவர் உம்மை நேசித்து உமக்காக மரித்துள்ளார் என்பதை விளங்கிக்கொள்ளும். இயேசு கிறிஸ்து மரித்ததன் மூலமாக உமது பாவங்களுக்காகச் செலுத்தினார், அதனால் நீர் பரலோகம் செல்ல முடியும். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் ரோமர் 5:8, இயேசு சிலுவையில் மரிக்கையில் அவரின் இரத்தம் உமது பாவங்களுக்காகச் செலுத்தப்பட்டது. 'அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது' கொலோ 1:14.

உம்மால் பரலோகத்தைச் சம்பாதித்துக் கொள்ள முடியாது என்பதை விளங்கிக்கொள்ளும், இயேசு சிலுவையில் மரிப்பதற்கு முன்பு 'எல்லாம் முடிந்தது' என்றார் யோவான் 19:30. அவர ்இப்போது உமக்கு ஒரு வீட்டை பரலோகத்தில் கொடுக்க விரும்புகிறார். '...தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன் ௳' ரோமர் 6:23.

இயேசு உம்மை சதாகாலத்திற்கும் இரட்சிக்கிறார் என்பதை விளங்கிக்கொள்ளும். இயேசு மரணத்தில் நிலைத்திருக்கவில்லை. அவர் உயிர்த்தெழுந்தார். அவர் இப்போது பரலோகத்தில் ஜீவனோடு இருந்துகொண்டு, தன்மீது நம்பிக்கை வைப்பவர்களுக்காக பரிந்துபேசுகிறார். கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங் களின்படி மூன்றாம் நாளில் உயித்தெழுந்தார் 1கொரி 15:3,4. மேலும் தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார் எபிரெயர் 7:25.

விசுவாசத்தினாலே, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும். எல்லாருக்கும் நித்தியஜீவனாகிய அன்பளிப்பைக் கொடுப்பதற்காக இயேசு மரித்தார். ஆனால் இது மற்றைய எல்லா அன்பளிப்பைப்போலவும், நீர் இதனை நீராகவே ஏற்றுக்கொள்ளா விட்டால் எவ்விதத்திலும் பயனற்றதே. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார் யோவான் 1:12

விசுவாசம் என்பது பரிபூ ரணமான நம்பிக்கை. இதனோடு வேறெதையுமே சேர்க்காமல் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்பட்டீர்கள் என வேதாகமம் கூறுகிறது. கிருபை யினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு, ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல, எபேசியர் 2:8,9

இயேசு கிறிஸ்துவின் மீதான பரிபூ ரண விசுவாசம் மாத்திரமே இரட்சிக்கும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது இரட்சிக்கப்படுவாய் அப் 16:31

விசுவாசத்துடன் வேறேதாவதொன்றை இணைக்க முயற்சிப்பீரானால் அது கிரியை எனப்படும். ஆதலால் மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் ரோமர் 3:28

அருமையான ஆததுமாவே, உமது வழியில் நீர் முயற்சிப்பதை நிறுத்த விரும்பி இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பீரானால், இப்போதே இரட்சிக்கப்பட முடியும்! இது இப்போது உம்மைப்பொறுத்தது!

உமது தலையைத் தாழ்த்தி உமது சொந்த வார்த்தையில் ஜெபியும், நீர் ஒரு குற்றமான பாவியென்பதை ஒத்துக்கொள்ளும். உமது முழு இருதயத்தோடும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பது உம்மை நரகத்தில் இருந்து இரட்சித்து உமது வாழ்க்கையின் வழியை மாற்றும்.

வேதாகமம் கூறுகிறது, கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரில் இருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் ரோமர் 10:9. ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் ரோமர் 1013

நீர் ஒரு குற்றமான பாவியென்பதையும், இயேசு கிறிஸ்துவை உமது சொந்த இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளாமலும் விடுவீரானால் வேதாகமம் என்ன கூறுகிறதென்பதைக் கவனியும் .....விசுவாசமுள்ள வனாயிராதபடியினால், ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று யோவான் 3:18.

நீங்கள் இத்துண்டுப்பிரதியை வாசித்து இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக விசுவாசிக்கத் தீர்மானித்திருப் பீர்களானால் எமக்கு எழுதித் தெரிவியுங்கள். நாம் உங்களுக்கு உதவி செய்யவும், இலவசமாகப் புத்தகங்களை அனுப்பவும் விரும்புகிறோம்.

உமது பெயர ______________________________

முகவரி ______________________________

______________________________

______________________________

**FELLOWSHIP TRACT LEAGUE**
P.O. BOX 164 • LEBANON, OH 45036
www.fellowshiptractleague.org © Tract 5610 (Tamil - Sri Lanka)
கர்த்தர் வழங்குவதைப்போல எல்லாப் பிரசுரமும் இலவசம